அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

சமுதாயக் கூடம்

***12801—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, மூலனூர் ஊராட்சி ஒன்றியம், தலையூர் ஊராட்சி, மல்லம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தாராபுரம் தொகுதி, மூலனூர் ஒன்றியம், தலையூர் ஊராட்சி, மல்லம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த உறுப்பினரின் கோரிக்கை, மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு

2017 மார்ச் 20]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் சட்டமன்றத் தொகுதி ஆதி திராவிடர்கள் அதிகமாக வாழும் பகுதியாகும். அங்கேயுள்ள பஞ்சாயத்துகளில் ஆதி திராவிடர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது விசேஷங்கள் செய்ய வேண்டுமென்றால், 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தொலைவு சென்றுதான் செய்திட வேண்டியிருக்கிறது. ஆகவே, மல்லம்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்பில் கண்டிப்பாக சமுதாயக் கூடம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளில் 50 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, ஆவணங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்து அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் எனது தொகுதிக்கு ஆண்டுக்கு ஐந்து சமுதாயக் கூடங்களை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள் மூலமாகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*